**மேலும் இலவச பிரதிகளுக்கும்,**
**இலவச பத்திரிகை பிரதிகளுக்கும்**
**எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.**





இந்தியாவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :

**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.


ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :

**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk


# புது சிருஷ்டி

**சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்**


இதழ் 26

- பணி குறித்து நமது மனப்பான்மை
- கோடுகள் உரைதலின் மேன்மை
- வேதாகம சத்தியத்திற்கான சான்று
- "....இப்படி மட்டும் இருந்திருந்தால்..."
- வனாந்தரத்தில் நடமாட்டம்
- யோசேப்பின் சோதனைகளும் வெற்றிகளும்

## கிறிஸ்டடெல்ஃபியர்கள் யார் ?

கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் (Christadelphians) என்ற பதம் கிரேக்க மூலமொழிகளாகிய Christ மற்றும் adelphos என்ற பதங்களிலிருந்து உருவானது. இதன் அர்த்தம் "கிறிஸ்துவில் சகோதரர்" என்பதாகும். கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் என்ற உலகளாவிய கிறிஸ்தவ சமுதாயம் 'வேதாகமத்தில் முழுமையாக நம்பிக்கை வைக்கிற' மக்கள் கூட்டமாகும். வேதவாக்கியங்களெல்லாம் தேவனால் அருளப்பட்டவை என்று உறுதியாக நம்புகிறார்கள்.

நாங்கள், தேவனுடைய (ஒரே பேறான) குமாரனாகிய இயேசு கிறிஸ்து வல்லமையோடு பூமிக்குத் திரும்பி வருவார் என்றும், அவர் வருத்தங்கள், அக்கிரமம், ஆக்கிரமிப்புகளை நீக்கி, தமது ஜனங்களுக்கு நியாயத்தையும், சமாதானத்தையும், நீதியையும் கொண்டு வருவார் என்றும் நம்புகிறோம்.

நாம் மரித்தாலும், மரித்தோரிலிருந்து எழும்பி, நியாயந்தீர்க்கப்படுவோம் என்று நம்புகிறோம். அத்துடன், இப்போது வாழும் வாழ்க்கையில் தன்னயமும் பொல்லாங்கும் நிறைந்து வாழ்ந்தவர்கள் நித்தியத்துக்கு வாழமுடியாமல் அழிக்கப்படுவார்கள். அதற்கு மாறாக, தேவனுடைய வார்த்தையை நம்பி கீழ்ப்படிந்து ஜீவித்தவர்கள் நித்தியமாக ஜீவித்திருப்பார்கள். மேலும் ஒவ்வொருவரின் வாழ்விலும் இரண்டு முக்கியமானவைகளை நிறைவேற்றியே ஆக வேண்டும் என்று விசுவாசிக்கிறோம். அவைகளில் (1) தேவனிடம் முழு இருதயத்துடன் அன்பு கூர வேண்டும். (2) உன்னைப் போல பிறரை நேசிக்க வேண்டும்.

ஒருங்கிணைப்பாளர் : லினஸ் டேனியேல்
Email : linus@choose2live.info
வேதத்தின் சத்தியத்தை கேளுங்கள்
http// www.choose2live.info/new_creation
இந்தியாவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.
ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk
Website: www.readthebible.lk

**புது சிருஷ்டி பதிப்பாளர் குழு**

லினஸ் டேனியேல் : தலைமை ஒருங்கிணைப்பாளர்
ராஜபட்சம் ஆனந்தா : மொழிபெயர்ப்பு, பதிப்பு மற்றும் கணினி ஒருங்கிணைப்பாளர்
பவித்ரா : நிர்வாகம், உபபதிப்பாளர்

திருமதி கிலாடிஸ் சுகிர்தராஜ். சந்திர மோகன் மற்றும் திருமதி சாந்தி பவுல் அவர்களின் தமிழ் மொழிபெயர்ப்பு உதவிகளுக்காக சிறப்பான நன்றி கூறுகிறோம்.

இந்த பத்திரிகையின் வாயிலாக, வேதவாக்கியங்களை வாசிக்க உங்களைத் தூண்டுவதே எங்கள் குறிக்கோள். இதிலுள்ள கட்டுரைகள் உங்களை ஆவிக்குரிய வளமூட்டி வளர்க்க உற்சாகப்படுத்தும் என நம்புகிறோம். நம்மை இரட்சிப்புக் கேற்ற ஞானமடையச் செய்வதால் வேதாகமத்தைத் தினமும் வாசிக்க உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.

இந்த பத்திரிகையில் காணப்படும் எல்லா கட்டுரைகளும் அனைத்துலக கிறிஸ்டடெல்ஃபிய வழிமுறையிலிருந்து தெரிந்தெடுத்து மொழி பெயர்ப்பு செய்து பிரசுரமாகியுள்ளன.

*"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" (2. கொரிந்தியர் 5:17).*



# பணி குறித்து நமது மனப்பான்மை



''மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ்செய்யாமல், கிறிஸ்துவின் ஊழியக்காரராக, மனப்பூர்வமாய் தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள்... அவனவன் செய்கிற நன்மையின் படியே கர்த்தரிடத்தில் பலனை அடைவானென்று அறிந்து, மனுஷருக்கென்று ஊழியஞ்செய்யாமல், கர்த்தருக்கென்றே நல் மனதோடே ஊழியஞ் செய்யுங்கள்." (எமே. 6:6-8).

நாம் பணி செய்யும்போது மாத்திரம் "தண்ணீர் புக முடியாத அறை" போன்ற ஒரு வாழ்க்கையை வாழுகிறோம். அதற்கும் மீதி இளைப்பாறுகிற நேரத்தில்சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து நடப்பதற்கும் வேறு பாடுகளைக் காண்பிக்கிறோம்,இது மோசமானது. சத்தியம் என்பது வெறுமையாகப் புத்தகங்களிலும் பிரசங்கத்திலும் வாரக்கூட்டங்களில் மாத்திரம் இருப்பது அல்ல; அது அநுதினமும் ஒவ்வொரு மணி நேரமும் அடங்கி நடக்கும் ஒன்றாகும். இதற்காக நாம் எடுக்கக்கூடிய சிறப்பான முயற்சி யாதெனில், நாமறிந்தவர்கள் மத்தியில் சத்தியத்தை பிரசங்கிக்க எடுத்துக் கொள்ளும் நேரங்களாகும், நாம் சத்தியத்தை அந்நியரிடம் மாத்திரம் போதிக்கிறவர்களாயிருந்தால் பரிதபிக்கத் தக்கவர்கள்.

நமது அநுதின பணிநேரம் அந்தந்த நாளின் பெரும்பகுதி நேரத்தை ஆக்கிரமிக்கிறது. நாம் ஒரு போதும் "சத்தியத்தைப்போதிக்கும் படியாக" நமது பணிகளை முடக்குவது தவறான செயலாகும். மேலும் நமது பணியை சீக்கிரமாகவும் சுலபமாகவும் முடிக்கும் படியாக எப்போதும் "கடியாரத்தைப் பார்க்கிறவர்களாக" இருக்கவும் கூடாது.

நாம் செய்யக் கூடிய அநுதின பணியைச் சிறப்பாகச் செய்யக்கூடிய ஒரேவழி, அதைத் தேவனிடத்தில் ஒப்புவிப்பதாகும். பணிஎன்பது, ஆதியில் சாபத்தின்பலனாக வந்தது என்று எண்ணுவதுதவறு, மாறாக, ஆதாம்

சிருஷ்டிக்கப்பட்ட முதல் உலகிலேயே ஆசீர்வாதத்தின் ஒரு பங்காகத் தேவன் அவனுக்குக் கொடுத்தார் (ஆதி 2:2, 8,15). நமது எஜமானின் பெரும்பகுதி ஜீவியம் தச்சுவேலையில் கழிந்தது. பின்னால் அவர் தமது அருளுரைகளில் கட்டிடப்பணி, விவசாயி, மீனர், மெய்ப்பர் போன்ற உவமைகளைக் கையாண்டார். ஏனெனில் அவருடைய சீஷர்கள் இப்படிப்பட்ட தினக்கூலிகளில் ஈடுபட்டிருந்தனர்.

நமது பணியில் மட்டும் முழுக்கவனத்தைச் செலுத்துவதனால் நமது வாழ்க்கை பிரச்சனை தீர்ந்துவிடாது. அதன் மனபாரமும் தீராது. நடை முறைபடுத்தி பார்க்கும்போது தினசரி வேலைக்கும் அறநிலை பணிக்கும் சரியான நேர ஒதுக்கீடு செய்வது முறையாக இருக்கும். இவைகளில் நமது சரியான மனோபாலம் அல்லது மனப்பான்மை இருந்தால் அது பெருதவியாக இருந்து பிரச்சனைகளைத் தீர்க்க வழி செய்யும்.

பணியைக் குறித்த இந்த மனோபாவம் பணியின் நலனுக்கு ஏற்றதாக கவனம் செலுத்துவதால், ஏராளமான வருமானத்தை ஈட்டும்படி மாத்திரம் அல்ல, அல்லது எஜமானின் திருப்பதிக்கென்றும் அல்ல, அது பயன்படுகிறது. நமது பணியின் எஜமானர் எதிரில் இருக்கலாம், இல்லாமல் போகலாம். ஆனால் நமது உண்மையான எஜமானர் பரலோகத்தில் இருக்கிறார், எனவே "கண்பார்வைக்கென்று பணி" என்பது அடிபட்டுப் போகிறது (எபே. 6:6). சில பணிகள் நாம்தெரிந்து கொள்ளும் மனோபாவம் மிகமுக்கியமாகும். சீஷனாக இருக்கும் ஒரு விசுவாசிக்கு இருக்கக்கூடிய நற்பண்புகளில் இந்த வித பனப்பான்மை மிகமுக்கியமாகும். அதாவது, செய்யும் பணியைக் "கர்த்தருக்கென்று" செய்யமுடியுமா ?

லௌகீகத்திலிருந்து நம்மில் பவர் விடுபட்டிருந்தாலும், இன்னும் அதில் நாம் பணியாளர்களாகவே காணப்படுகிறோம். உண்மை, சுத்த மனசாட்சி, நம்பிக்கை, நேர்மை மற்றும் உதவி செய்வது இப்படிப்பட்ட குணநலனகள நமமோடுபணிபுரிகிற பிறருடன நமது தத்துவங்களைப் போதிப்பதாக மட்டும் இராமல், அவர்களுள் நம்மேல் அபிமானம் மற்றும் ஆதரவு தருவதாக இருக்கும். நமது எஜமானர் நம்மை பணிகளிலிருந்து விடுவியாமல், நம்மைக் கசப்பு, தவறான நோக்கம், இழிவான எண்ணம் மற்றும் மனப்பான்மையிலிருந்து விடுவித்திருக்கிறார்.



# கோடுகள் உரைதலின் மேன்மை

ஒரு நாள் ஒரு சிறுவன் ஆள் அரவமற்ற ஒரு தெருவின் வழியாக நடந்து கொண்டிருந்தான். வலிய வந்து வம்புதும்பு செய்யும் குணமுடைய மூன்றுபையன்கள் எதிரேவருவதைக் கண்ட சிறுவனுக்குத் தப்பித்து ஓட நேரமில்லை. 'நன்றாக மாட்டிக்கொண்டோம்', என்றெண்ணிய அவன், தைரியத்தை வரவழைத்துக் கொண்டான். இளந்கை பூத்தவாறே அவர்களைக் கடந்து செல்ல முயன்றவனை, வந்த மூவரில் பெரியவன் சிறுவனை ஒரு தட்டு தட்டினான். கீழேவிழுந்த சிறுவன் தூசியைத் தட்டியவாறே எழுந்தான். "நான் இப்போ உனக்குக் குடுக்கப்போற அடியை உன்



ஆயுசுக்கும் மறக்கமாட்டாய்," என்றவாறே அந்தப்பெரியவன் தன் சட்டை கைகளை மேலேவரை உருட்டிக்கொண்டான். சிறுவன் வேகமாகக் குனிந்து தரையில் ஒரு கோடு வரைந்தான். அந்தக் கோடு சிறுவனுக்கும் வம்புக்காரப் பையன்களுக்கும் இடையில் இருந்தது. பின்னர் நிமிர்ந்து நின்றான். அவன்களின் நெஞ்சு வரை கூட அவன் வளர்த்தி இல்லை "யாராவது இந்தக்கோட்டுக்கு இந்தப்பக்கம் வந்து பாருங்கள் பார்ப்போம்," என்று தைரியமாக சவால் விட்டான். பெரியவன் உடனே கோட்டைத் தாண்டி வந்து சிறுவனிடம், "இப்ப என்னடா செய்யப்போற ?" என்று உறுமினான். சிறுவன் "வாழ்த்துகள், பாராட்டுகள். இப்போ நாமிருவருமே ஒரே பக்கத்தில் இருக்கிறோம்," எனப் பெரியவனின் கையைக் குலுக்கினான். சிறுவனின் சமயோசித புத்தி பெரியவனை வியக்க வைத்தது. "ஆமாண்டா, இப்ப நான் அவன் பக்கம்" எனத் தன்னோடு சேர்ந்து வந்த மற்ற இரு பையன்களிடம் கூற, அவர்கள் பயந்து ஓடியே போய்விட்டார்கள்.

அந்தச் சிறுவன் அறியாமலேயே பல வேதாகமசத்தியங்களைச் இவ்முறையில்காட்டிவிட்டான். "மெதுவான பிரிதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும்," என நிரூபத்துவிட்டான்.

"நீ உன் எதிராளியோடு வழியில் இருக்கும் போதே சீக்கிரமாய் அவனுடனே நல்மனம் பொருந்து," என்ற இயேசுவின் ஞானம் நிறைந்த புத்திமதியையும் பின்பற்றியிருக்கிறான். பாலொமோன் போதித்த பாடத்தின் உண்மையையும் நீரூபித்திருக்கிறான். "ஒரு சிறுபட்டணத்தில் கொஞ்சமனிதர் இருந்தார்கள். அதற்கு விரோதமாய் ஒரு பெரிய ராஜாவந்து, அதை வளைந்து கொண்டு

அதற்கு எதிராகப் பெரிய கொத்தளங்களைக் கட்டினான். அதிலே ஞானமுள்ள ஒரு ஏழை மனிதன் இருந்தான். அவன் தன் ஞானத்தினாலே அந்தப் பட்டணத்தை விடுவித்தான்." சாலொமோனின் முடிவுயாதெனில் "பெலத்தைப் பார்க்கிலும் ஞானமே உத்தமம்."

சிறுவனின் விஷயத்தில் அது மெய்யாகிவிட்டது. நாம் அந்தச் சிறுவனைப் போல ஞானமாயுள்ளோமா? ''சர்ப்பங்களைப் போல வினாவுள்ளவர்களும் புறாக்களைப் போலக் கபடற்றவர்களுமாய் இருங்கள்," என இயேசுவே நமக்குச் சொல்லியிருக்கிறார். சில வேளைகளில் இதற்குத் தலைகீழாக இருந்திருக்கிறோம். புறாவைப்போல (குருவிமூளை) ஞானமுள்ளவர்களாகவும் சர்ப்பத்தைப் போல கேடுசெய்கிறவர்களாகவும் இருப்பதும் உண்டு.

இச் சிறுவன் சண்டையிடவோ தற்காத்துக் கொள்ளவோ முயலவில்லை. நாம் அப்படி இருக்கிறோமா? தற்காத்துக் கொள்வதென்பது உடல்ரீதியாக மட்டுமல்ல, அடிக்கடி வாய்வார்த்தைகளால் தற்காத்துக்கொள்வதும்தான். "கிறிஸ்து வையப்படும்போது பதில்வையாமல் இருந்தார்," எனப் பேதுரு எழுதுகிறார். "உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள், உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள், உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ணுங்கள்." என இயேசு நமக்குக் கூறியுள்ளார்.


இந்த வார்த்தைகளெல்லாம் நமக்குத் தெரிந்தவைதாம் ஆனால் அவைகளுக்குக் கீழ்ப்படிகிறோமா? நம்மைச் சரியாக நடத்தாத ஒருவருக்காகக் கடைசியாக எப்பொழுது ஜெபித்தோம்? "அவனுக்காக ஜெபிப்பதா?" என நாம் ஆச்சரியத்தில் வினவுகிறோம், ஆனால் இயேசுவானவர் நம்மிடம் சொன்னதுமட்டுமல்ல சிலுவையிலே அதைச் செய்தும் காட்டினார்.

நமக்கு எத்தனையோ உண்மைகள் மூளையறிவிலே தெரிந்திருந்தும், நம் அன்றாட வாழ்விலே அவைகளை ஏன் நாம் அப்பியாசிப்பதில்லை? சண்டை போடுகிறவர்களெல்லாரும் சண்டையை நிறுத்திவிட்டு, எதிர்கருத்துக்களையும் பதவிகளையும் கொண்டிருப்பவர்களுக்காக ஜெபித்தால், சகோதரத்துவத்திற்கு வரக் கூடிய நன்மையை எண்ணிப்பாருங்கள். நாமெல்லாருமே இயேசு சொன்னதைப் பயிற்சி செய்தோமென்றால் "சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கிய வான்கள் அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்" என்று இயேசு விவரித்த அணியின் ஒரு பகுதியாக வந்துவிடுவோம்.

நாம் வரையும் கோடுகளேல்லாம் மனிதனின் கோடுகள்தாம். கிறிஸ்து வரும்போது, நாம் கிறிஸ்து எங்கிருக்கிறாரோ, அந்தப் பக்கம் நாமும் இருக்கும்படி ஜெபம் பண்ணுவோம். ஏனெனில் ''என்னோடு இராதவன் எனக்கு விரோதமாயிருக்கிறான், என்னோடு சேர்க்காதவன் சிதறடிக்கிறான்," என இயேசு ஆண்டவர் கூறியுள்ளார்.



# வேதாகம சத்தியத்திற்கான சான்று



நவீன ஐரோப்பா உருவாக வழிவகுத்த வல்லரசுகள்.

பாபிலோன் அரசனுக்கு வந்த ஒரு கனவை தானியேல் தீர்க்கதரிசி எழுதியுள்ளார். இன்றைய ஐரோப்பா உருவாக வழிவகுத்த வல்லரசர்கள் பற்றிக் கூறியது. அந்தக் கனவின் அர்த்தத்தை தானியேல், அரசனுக்குக் கூறினான்.

அவன் காலத்திலிருந்த வல்லரசாகிய பாபிலோனின் வீழ்ச்சிக்குப் பின்னுள்ள 2500 ஆண்டுகளில் என்ன நடக்கும் என மேலோட்டமாக விவரித்தான்.

"உமக்கும் பிறகு உமக்குக் கீழ்த்தரமாந வேறொரு ராஜ்யம் தோன்றும், பின்பு பூமியை யெல்லாம் ஆண்டுகொள்ளும் வெண்கலமான மூன்றாம் ராஜ்யம் ஒன்று எழும்பும். நாலாவது ராஜ்யம் இரும்பைப் போல உரமாயிருக்கும்" தானியேல் 2:39,40.

பின் நாலாவது ராஜ்யத்தைத் தொடர்ந்து

அவர்கள் மற்ற மனுஷரோடே சம்பந்தங்கலப்பார்கள், ஆகிலும்... அவர்கள் ஒருவரோடொருவர் ஒட்டிக்கொள்ளா திருப்பார்கள். தானியேல் 2:43.

தானியேல் கீழ்க்கண்டவற்றை முன்னறிவித்தான் எனக் காண்கிறோம்.


பாபிலோனைத் தொடர்ந்து மூன்று வல்லரசுகள் இருக்கும்.

நாலாவது வல்லரசின்மேல் இன்னொருவர் வெற்றி கொள்வதில்லை. ஆனால் அதுவே உடைந்து பிரிந்து போய்விடும்.

ஆகவே நடந்தது தான் என்ன?

பாப்லோனுக்கப்புறம் வந்த வல்லரசுகள் மேதிய பெர்சியர், கிரீஸ் மற்றும் ரோம். நாலாவது வல்லரசாகிய ரோம் இன்னொன்றால் மேற்கொள்ளப்படவில்லை. தானியேல் சரியாக முன்னறிவித்தபடி, ரோம வல்லரசு சின்னச் சின்ன அரசுகளாகச் சிதைந்து விட்டது. இந்தச் சிறு அரசுகள் பிரிந்தவாறே இருந்து, கடைசியில் இன்று நமக்குத் தெரிந்த ஐரோப்பிய நாடுகளாக உருவாகின.

அடுத்தடுத்து நான்கு வல்லரசுகள், ஒவ்வொன்றும் முந்தினதை மேற்கொண்டது.



நாலாவது வல்லரசான ரோம் யாராலும் மேற்கொள்ளப்படவில்லை.

அது உடைந்து பல தேசங்களாகும்.

# “....இப்படி மட்டும் இருந்திருந்தால்..."

## (சிந்திப்பதற்கு)

“.... இப்படி மட்டும் இருந்திருந்தால்....” இச் சொற்றொடொரை நாம் எப்போதாவது கேட்டால் அது ஒரு எச்சரிப்பின் சத்தமாகும். இஸ்ரேல் புத்திரர் எல்லாரும் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்தார்கள். எகிப்து தேசத்திலே செத்துப்போனோமானால் நலமாயிருக்கும். இந்த வளாந்தரத்திலே நாங்கள் செத்தாலும் நலம். நாங்கள் பட்டயத்தால் மடியும்படிக்கும், எங்கள் பெண்ஜாதிகளும் பிள்ளைகளும் கொள்ளையாகும்படிக்கும், கர்த்தர் எங்களை இந்த தேசத்துக்குக் கொண்டு வந்தது என்ன ? எகிப்பதுக்குத் திரும்பிப் போகிறதே எங்களுக்கு உத்தமம் அல்லவோ” என்று முறுமுறுத்தார்கள். (எண்ணாகமம் 14:2,3)



‘‘... இப்படி இருந்திருந்தால் நலமாயிருக்கும்,’’ என்ற அவர்களின் மனப்பான்மை, தேவன் அவர்களுக்கு எதைத் தருகிறாரோ அதில் அவர்கள் திருப்திப்படவில்லை என்பதைக் காட்டுகிறது. தேவனுடைய வாக்குத்த்ததால்களில் நம்பிக்கை வைக்குமளவிற்கு அவர்களிடம் விசுவாசம் இல்லை என்பதைக் காட்டுகிறது. அவர்கள் வருங்காலத்தைப் பார்ப்பதற்குப் பதில் கடந்தகாலத்தைத் தான் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் அம்மனப்பான்மை தெரிவிக்கிறது. இந்த மனப்பான்மைகளில் எதுவுமே நமக்கு ஆரோக்கியமானவையல்ல.

“... இப்படி, இருந்திருந்தால்...” என்று நாம் கூற ஆரம்பிக்கும் போதே, நாம் குற்றஞ்சாட்ட ஆரம்பிக்கிறோம். ஆனால் கடந்தகாலத்தை மட்டும் பார்த்து, தேவனில் நம்பிக்கை வைக்க மறந்து, நன்றிவற்றவர்களாய் இருப்பது நமக்கு எந்த நன்மையும் பயக்காது. இத்தகைய பிற்போக்கான மனப்பான்மைகள், நம்மைப் பின்னே தள்ளி, கடந்த காலம் எப்படி இருந்தாலும் அற்புதமானதாய் அமையவிருக்கும் எதிர்காலத்தைத் தடுத்து நிறுத்துகின்றன.

முன்னோக்கிய பார்த்து, தேவனில் நம்பிக்கை வைத்து, நமக்கு கடந்தகாலத்தில் நடந்த ஒவ்வொன்றிற்கும் (கெட்ட காரியங்களுக்கும் கூட) நன்றியுள்ளவர்களாய், கடந்த காலத்தில் நடந்தது நடந்ததே என ஏற்றுக்கொண்டு முன்னேறிச் செல்ல உறுதி பூண்டவர்களாயிருப்போமாயின், தேவன் நமக்கென்று திட்டமிட்டு வைத்துள்ள மகத்துவமான எதிர்காலத்தின் முழுப் பயனை நாம் அநுபவிக்கக் கூடும். இஸ்ரவேல் வாக்களிக்கப்பட்ட பூமியைப் பெற்றிருக்கக் கூடும். அதற்கும் குறைவாகவா தேவன் நமக்கு அருளுவார் ?



# வனாந்தரத்தில் நடமாட்டம்

1. சுமார் 12 மாதங்கல் தங்கினபின்பு, இஸ்ரவேலர் சீனாய் மலையிலிருந்து மேகஸ்தம்பத்தினால் நடத்தப்பட்டனர். (எண்ணாகமம் 10:11-13).

2. தபேராவில் முறுமுறுத்தது அக்கினியின் சுட்டெரிப்பை வரவழைத்தது. (11:1-3)

3. ஜனங்கள் இறைச்சிக்காக கூக்குரலிட, காடைக்குருவிகள் கிடைத்தன. மிகச் சீக்கிரத்தில் கொள்ளைநோய் சாவு ஏற்பட்டது. (11:4-35).

4. மிரியாமும் ஆரோனும் மோசேக்கு விரோதமாகப் பேசினர். மிரியாம் குக்ஷ்டரோகத்தினால் பாதிக்கப்பட்டாள். அதனால் இஸ்ரவேலரின் பயணம் மேலும் ஏழு நாட்களுக்குத்தாமதமானது. (12:1-16).

5. காதேஷ் பர்னேயாவிலிருந்து பனிரெண்டு பேர் தேசத்தை வேவு பார்க்கும்படி அனுப்பப்பட்டனர் (13:1-26).

6. அவகம்பிக்கையான பத்து வேவுகாரர்கள் கொடுத்த அறிக்கையின பேரில்இஸ்ரவேலர் அமளிசெய்து, எகிப்துக்குத் திரும்பிச் செல்லத்தங்களை நடத்தும்படி ஒரு புதிய தலைவனை நியமித்தனர் (14:1-10).

7. கர்த்தருடைய தண்டனையை அறிவித்ததைத் தொடர்ந்து, ஜனங்கள் வாக்குத்தத்த தேசத்துக்குள் பிரவேசிக்க முயற்சி செய்கின்றனர். ஆனால் ஓர்மா என்னுமிடத்தில் அமலேக்கியரும் கானானியரும் அவர்களைத் துரத்தியடித்தனர். (14:40-45).

8. இன்னும் 38 வருடங்கள் திரிந்து வருகையில், கோராடத்தான் மற்றும் அபிராம் என்பவர்கள் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக எழும்பி முறுமுறுத்தனர். எனவே பூமி பிளந்து அவர்களை விழுங்கியது. (16:1-35).

## தேசத்தில் பனிரெண்டு வேவுகாரர்கள் “நாங்கள் எங்கள் பார்வைக்கு வெட்டுக்கிளிக்ளைப் போல் இருந்தோம்"

எகிப்திலிருந்து வெளியேறி விடுதலையாகி இரண்டு வருடங்கள் சென்றபின்பு, இஸ்ரவேலர் காதேஷ் பர்னேயாவுக்குவந்து சேர்ந்தார்கள். மறுபடியும் தங்கள் அவநம்பிக்கையை வெளிப்படுத்தினவர்களாக தேசத்தை வேவுபார்க்கவேண்டும் என்று முரட்டாட்டம் பண்ணினார்கள். அவர்கள் தேசத்தைவேவு பார்த்ததில் இரண்டு கொள்கைகளை உறுதிபடுத்தினது: (1) கர்த்தர் அவர்களிடம் கூறியிருந்தபடியே அந்த தேசம் காணப்பட்டது அவருடைய உண்மையை வெளிப்படுத்தினது. (2) அவர்கள் விசுவாசித்து நடவாமல் தரிசித்து

நடக்க முற்பட்டது அவர்களுடைய அவிசுவாசத்தை வெளிப்படுத்தியது.



காதேஷில் தேவன் அவர்களைப் பொறுத்துக்கொண்டதை முடிக்குமளவுக்கு அவர்களுடைய தவறுதல் வந்து எட்டினது. எனவே வாக்குத்தத்தம் பண்ணின தேசத்தில் அவர்கள் பிரவேசிப்பதில்லை என்று அவர் ஆணையிட்டார். மேலும் 38 வருடங்களுக்கு அனாவசியமாக வனாந்தரத்தில் அவர்களை அலையச் செய்தார். அதன் மூலம் அவர்களுடைய சடலங்கள் வனாந்திரத்தில் அழிந்தன (எண்ணாகமம் 32:13).

இந்தப் பாடத்தில் நமது நோக்கம், நமது ஜீவியத்தினூடே தேவன் நம்மைக் காப்பாற்ற வல்லவர் என்ற நம்பிக்கையும் மன உறுதியும் நாம் மேற்கொள்ளுவது அவசியம் என்பதைக் காட்டுவது ஆகும்.

எண்ணாகமம் 13:14; உபாகமம் 1:20-46 பனிரெண்டு வேவுகாரரை அனுப்புதல் (எண்ணாகமம் 13:1-20).

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தின் எல்லைப் பகுதிக்கு வந்தவுடன் வேவுகாரரை அனுப்பி தேசத்தை வேவு பார்க்கும் படிஜனங்கள் வற்புறுத்தினார்கள். (உபாகமம் 1:22). கர்த்தர் ஏற்கனவே "அந்தத் தேசம் பாலும் தேனும் ஒடுகிற தேசம்" என்று (யாத்திராகமம் 3:17) வாக்களித்திருந்தார். அதுமட்டுமல்லாமல் அவர் ஏற்கனவே அதை வேவு பார்த்து, அது "எல்லா தேசங்களின் மகிமை" (எசேக்கியேல் 20:6,15) என்று கூறியிருந்தார். இவ்வாறு இஸ்ரவேலர் விசுவாசித்து நடவாமல் தரிசித்து நடந்தனர்.

முதலில் வேவுகாரரை அனுப்புவது மோசேயின் எண்ணமாக இருக்கவில்லை யென்றாலும், கர்த்தரிடம் அதுகுறித்த அனுமதி பெற்றபின்னரே அவன் அந்த ஆலோசனைக்குச் சம்மதித்தான் (உபாகமம் 1:22-23; எண்ணாகமம் 13:1-3).

அந்தப்படியே ஒவ்வொரு கோத்திரத்திலிருந்தும் ஒவ்வொருவராக



மொத்தம்பனிரெண்டு தலைவர்கள் இதற்காகத் தெரிந்தெடுக்கப் பட்டனர். இவர்கள் சரியான வழியில் விசுவாசத்தையும் தைரியத்தையும் காட்டத் தவறினால் "மந்தையின் ஆடுகளின் நிலைமை" மிகவும் மோசமாகிவிடும். (1. பேதுரு 5:1-3; எபிரெயர் 13:7 ஒப்பிடுக). இவர்களின் நடுவில் காலேப் மற்றும் யோசுவா இருந்தார்கள். (எண்ணாகமம் 13:6,8 இதில் "யோசுவா" வை "ஓசெயா" என்று அழைத்துள்ளது.) இவர்கள் எல்லோரும் போய்வந்து தேசத்தில் கண்ட நிலவரத்க்கைக்குறித்து அறிக்கையாகக் கூறவேண்டும் என்பது மோசேயின் கட்டளையாக இருந்தது:

அ) அங்கு ஜீவித்த ஜனங்கள் - "பலசாலிகளா அல்லது பெலவீனரக்ளா, கொஞ்சம் பேரா அல்லது திரளானவர்களா" (வ.18).

(ஆ) அவர்கள் குடியிருப்பின் வீடுகளின் அமைப்பும் பாதுகாப்பும் (வ.19); மற்றும்

(இ) பூமியின் செழுமை, மரங்கள் மற்றும் கனிகள் (வ. 20)

தேசம் வேவு பார்க்கப்பட்டது (எண்ணாகமம் 13:21-25)

நாற்பது நாட்கள் (சோதிக்கப்படுதல் மற்றும் விசுவாசம் உறுதி படுத்துதலோடு சம்பந்தப்பட்டது) அவர்கள் தேசத்தை வேவுபார்க்கும்படி வடக்கிலிருந்து தென்திசைவரை அதை ஆராய்ந்தனர் (வ.25). "எஸ்கோல்" என்னும் இடத்தில் (திராட்சை குலை என்று பொருள்) பூமியின் செழுமையைக் காண்பிக்கும்படி மாதளம்பழங்கள், அத்திப் பழங்கள் மற்றும் திராட்சை குலைகளைச் சுமந்து வந்தனர். அவைகளை ஒரு தடியிலே இரண்டுபேர் கட்டித் தூக்கிக் கொண்டு வந்தார்கள் (வ. 23).

எப்ரோன் என்னும் இடத்தில் அவர்கள் அனாக்கியர் என்னும் நாட்சத வம்சத்தினரைக் கண்டார்கள். அவர்கள் மேலும் கொத்தளங்கள் என்னும் வான் அடுக்கு மாளிகை கட்டங்களைக் கண்டார்கள். அவைகள் அவர்களது கண்களுக்கு வானளாவினவைகளாகக் காணப்பட்டன. அந்தக் கட்டடங்கள் மிகவும் பலமுள்ளவைகளாயிருக்கின்றன என்று பூமியைத் தோண்டி ஆராய்ச்சி செய்கிற புவியியல் சரித்திர ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். வேவுகாரர் பலமான கோபுரங்களையும் அங்கு வசித்த ராட்சதாகளின் திடமான சரீரங்களையும் பார்த்துவிட்டு, தாங்கள் நிராயுதபாணிகள் என்றும் பலவீனர்கள் என்றும் தாழ்வாகவும் குறைவாகவும் எண்ணினார்கள். கர்த்தர் தங்களோடு இருப்பதையும், அவர் எந்தத் தேவைகளின் நடுவிலும் போதுமானவராக இருப்பதையும் அவர்கள் மறந்தார்கள். தோல்வி மனப்பான்மை மறுபடியும் அவர்களை மேற்கொண்டு

பீடித்தது. அப்படிப்பட்ட பெரிய பிரச்சனைகளை எதிர்த்து அவர்கள் எப்படி ஜெயிக்க முடியும்?

திராட்சகுலைகள் இரண்டுபேர் ஒரு தடியில் கட்டி தூக்குமளவுக்கு இருந்ததால் தேசத்தின் செழிப்பையும் அழகையும் எடுத்துக் காட்டினாலும், ஐயோ, கஷ்டங்களை நினைத்தால் என்ன செய்வது? இதனால் தேசத்தை நாடும் விரும்பம் குறைந்து, அதைச் சுதந்தரிக்கப்படும் பாடுகள் பெரிதாக அவர்கள் கண்களுக்குத் தெரிந்தது. கர்த்தர் தங்கள் பட்சத்தில் இருப்பதை முழுவதுமாக மறந்தார்கள். அவிசுவாசிகள் எப்போதும் பிரச்சனைகளைக் கண்டு முறுமுறுக்கிறார்கள். ஏனெனில் அவர்கள் தேசத்தைக் குறித்தவாக்குத்தத்தத்தைத் தரிசிக்க மாட்டாமலும், கர்த்தருடைய பலத்தை உணராமலும் இருந்து விடுகிறார்கள்.

வேவுகாரர்களின் மோசமான அறிக்கை (எண்13:26-33)

வேவுகாரர் திரும்பிவந்து தாங்கள் கண்டவைகளை மோசேயிடம் அறிவித்தனர் - அதன் அழகு மற்றும் செழிப்பைப் பறைசாற்றும் நற்கனிகள் (வ.27). அத்துடன் தங்கள் பீதியையும் பெலவீனத்தையும் வெளிப்படுத்துகிற வார்த்தைகளைச் சேர்த்தனர். ‘‘ஆனாலும், அந்த தேசத்திலே குடியிருக்கிற ஜனங்கள் பலவான்கள். பட்டணங்கள் அரணிப்பானவைகளும் மிகவும் பெரியவைகளுமாய் இருக்கிறது. அங்கே ஏனாக்கின் குமாரரையும் கண்டோம்.” (வ.28)

எல்லா ஜனங்களும் மனம் தளர்ந்து, எதிர்த்துப்பேச ஆரம்பித்தனர். விசுவாசமுள்ள காலேப் அவர்களை உற்சாகப்படுத்த முயன்றான். ‘‘நாம் உடனேபோய் அதைச் சுதந்தரித்துக்கொள்வோம். நாம் அதை எளிதாய் ஜெயித்துக் கொள்ளலாம்’’ என்றான். அவனுக்கு எதிராக மீதிப்பேர்: ‘‘நாம்போய், அந்தஜனங்களோடே எதிர்க்க நம்மாலே கூடாது” (வச 30-31). அவர்கள் அறிந்து தெரிந்து அந்த தேசத்தைக் குறித்து தவனான தகவல்களைக் கொடுத்தனா: ‘‘அந்த தேசம் தன்குடிகளைப் பட்சிக்கிற புதிய மொழிபெயர்ப்பில் ‘‘விழுங்கிப்போடுகிற’’) தேசம்’’ அடுத்தவாக்கியம் அவர்கள் எவ்வளவாக விசுவாசித்து நடவாமல் கண்ணின் காட்சியை நம்பினார்கள் என்று காட்டுகிறது. “நாங்கள் அதிலே கண்ட ஜனங்கள் மிகவும் பெரிய ஆட்கள்... அங்கே நாட்சதரையும் கண்டோம். நாங்கள் எங்கள் பார்வைக்கு வெட்டுக்கிளிகளைப் போல் இருந்தோக... அவர்கள் பார்வைக்கு அப்படியே இருந்தோம்.” (வச 28,32,33 ஒப்பிடுக 2, கொரிந்தியர் 4:18).



இப்படி மனந்தளரச் செய்த அறிக்கையைக் கர்த்தர் “துர்ச்செய்தி” (வ.32) யாகக் கனக்கிட்டார். அவரைப் பொருத்தமட்டில் அவர்கள் அவர் கொடுக்கும் தேசத்தை “உதாசீனம்” செய்து அதன்பேரில் “அவமானம்” கொண்டுவந்தனர் (எண்ணாகமம் 14:31,36; சங்கீதம் 106:24-25). அவர்களது அவநம்பிக்கை தேவன் அவர்களுக்குத் தேசத்தைக் கொடுப்பதைச் சந்தேகிக்க செய்தது. எனவே அவர்கள் “இஸ்ரவேலின் பரிசுத்தரை மட்டுப்படுத்தனார்கள்” (சங்கீதம் 78:41).

ஆதலால் தேவ ஊழியர்கள் விசுவாசத்தோடு அவரைச் சேவிப்பதைத் தடுப்பது எவ்வளவு மோசமானது. நாம் தேவஊழியத்தில் இருந்துக்கொண்டு, வேறொருவர் தேவ ஊழியஞ்செய்வதற்கு வருவதைத் தடுக்கும்விதமாக அதன் பிரச்சனைகளும் வேதனைகளும் பற்றி பேசுவது மோசமமானதாகும். ஆகவே இப்படிப்பட்ட பயங்கொண்டுவரும் காரியத்தைச் செய்யாதபடிக்கு நாம் எச்சரிக்கையாக இருப்போமாக.

ஜனங்கள் கலகஞ்செய்தது (எண்ணாகமம் 14:1-20)

ஜனங்கள் மனம் சோர்ந்துப் போனார்கள். அவர்களுக்குப் பின்னால் பயங்கர வனாந்தரம் இருந்தது. முன்னால் பலம் மிகுந்த சத்துருக்களின் கூட்டம். அவர்கள் பொறியில் அகப்பட்டதுபோல இருந்தார்கள். அவர்கள் அழுது கூக்குரலிட ஆரம்பித்தனர்.சில மாதங்களுக்கு முன்பு தங்கள் இரட்சிப்பின் தேவனுக்குத் துதி ஸ்தோத்திரங்கள் பாடினதை அவர்கள் நினைவுகூர்ந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்! (யாத்திரகமம் 15:1). இப்போது அழுகிறார்கள் (எண்ணாகமம் 14:1). ஆனால் இப்போது தேவன் அல்ல, அவர்கள் மாறியிருந்தார்கள். மிகவும் சமீப காலத்தில் தேவன் பார்வோனின் சேனையை அழித்தது நினைவில் இருக்கவேண்டும். அவரால் இப்போது சுலபமாகக் கானானியரை ஜெயிக்கவைக்க முடியும் அல்லவா! ஆனால் ஜனங்களிடம் விசுவாசம் குறைவுபட்டது. அவர்கள் மோசே மற்றும் ஆரோனிடம்மட்டுமன்றி, தேவனிடத்திலும் கலகம் பண்ணினார்கள். அவர்கள் மறுபடியும் எகிப்தின் அடிமைத்தனத்துக்குப் போகும்படி இப்போது ஒரு புதிய தலைவனை விரும்பினார்கள் (வச. 2-4).

மோசே அவர்களோடு வாதாடினான் (வ. 5ஒப்பிடுக உபாகமம் 1:29-31). யோசுவாவும் காலேபும் அவனைத்தாங்கிப் பேசினார்கள். ஆனாலும் ஜனங்கள் வெறிபிடித்தவர்களைப்போல், விசுவாச வீரர்களின் சொல் கேளாதவர்களாய் அவர்கள் மேல் எறியும்படி கற்களை எடுத்துக் கொண்டார்கள். அப்போது யாஹ்வே கர்த்தர் தலையிட்டு,மோசேயை ஜனங்களிடமிருந்து விலகிநிற்கும்படி அழைத்தார்.

ஏனெனில் அவர்களை அழித்து தமது உரிமையை விலக்குவதாக இருந்தார். மற்றொருமுறை மோசே ஜனங்களுக்காக யாஹ்வே காத்தரிடம் மன்றாடினதினால் அவருடைய கோபம் தணிந்து ஜனம் மீட்கப்பட்டது. (வச. 13-20).

கர்த்தருடைய இரண்டு மாறாத ஆணைகள் (எண்ணாகமம் 14:21-39)

கர்த்தர் ஜனத்தைப் பாதுகாத்தாலும், எகிப்து மற்றும் வனாந்தரத்தில் அவர் செய்த அற்புதங்களை நேரில் கண்ட சந்ததியை மன்னிக்க மாட்டார். (வ.22). தேவன் அந்த ஜனத்தின்மேல் வைத்திருந்த நோக்கத்தையும் அவிசுவாசமுள்ள சந்ததிக்குத் தந்த இரண்டு மாறாத ஆணைகளையுமம் திட்டிட்டிருந்தார்:

1. அவருடைய தெய்வீக நோக்கம்-அவர்கள் அவரைக்கைவிட்டிருந்தாலும்: "பூமியெல்லாம் யாஹ்வே கர்த்தருடைய மகிமையினால் நிறைந்திருக்கும் என்று என்னுடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன்." (வ.21)

2. தேவகோபாக்கினையின் தெய்வீக தீர்மானஅறிக்கை: ''இந்த வனாந்தரத்தில் உங்கள் பிரேதங்கள் விழும் என்று என்னுடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன்" (வ. 23, 28, 29).

கர்த்தர் தமது ஜீவனைக் கொண்டு ஒரு ஆணையைப் பிறப்பிக்கும்போது, அவருடைய வார்த்தை ஒருபோதும் மாறாது. (எபிரெயர்6:13-17; 7:21 ஒப்பிடுக). கர்த்தருடைய நோக்கம் வீணாவதில்லை (சங்கீதம் 72:19; ஆபகூக்2:14). என்றாலும் இஸ்ரவேலரின் ஒரு முழு சந்ததி தேவனுடைய ராஜ்யத்தின் தங்களது சந்தர்ப்பத்தை என்றைக்கும் இழந்துவிடுவார்கள் (சங்கீதம் 95:11 ஒப்பிடுக எபிரெயர் 3:16-18).

எவ்வளவு பயங்கரமான எச்சரிப்பு இது! இதைப் போன்ற எச்சரிக்கையை இயேசு கிறிஸ்துவைத் தள்ளுகிறவர்களுக்கு அவர் கூறினார்: "சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு அகன்று போங்கள்" (மத்தேயு 25:41).

சுமார் நாற்பது நாட்களாக வேவுகாரர் தேசத்தை ஆராய்ந்தார்கள். இதனால் ஒரு நாளுக்கு ஒரு வருட கணக்கின்படி, இஸ்ரவேலர் நாற்பது வருஷங்களாக வனாந்தர்ததில் சுற்றித்திரிந்தார்கள் (வ.34). ஏற்கனவே வனாந்தர அலைச்சலில் இரண்டு வருடங்கள் கென்றிருந்தது. இப்போது அவர்களுக்கு மேலும் 38 வருடங்கள் கூடுதலாகச் செலவு செய்ய வேண்டியிருந்தது. (உபாகமம் 2:14). யோசுவா மற்றும் காலேப் குடும்பம் அகற்றி (யோசுவா 24:15). மீதி எல்லா பெரியவர்களான அவிசுவாசிகளும் வனாந்தரத்தில் மடிந்தப்பின், அவர்களுடைய பிள்ளைகள் தேசத்தைச் சுதந்தரிப்பதாக இருந்தனர் (வ.31). மீதி பத்துபேரான



வேவுகாரர் தங்கள் அவநம் பிக்கைதரக்கூடிய துர்ச்செய்தியைப் பரப்பினபடியால் அவர்கள் கொள்ளைநோயினால் மரித்தார்கள். (வ.37).

யாஹ்வே கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு, அவருடைய கோபத்தை வெளிப்படுத்தினதைக் கண்ட ஜனங்கள் தங்கள் மேல் அறிவிக்கப்பட்ட தண்டனையைக் கருத்தில் கொண்டு, தாங்கள் செய்த அறிவீனமான காரியத்தைக் கண்டுகொண்டனர். அவர்கள் பாவஞ்செய்ததை ஒப்புக்கொண்டார்கள். (வ.40). ஆனால் இப்போது தேசத்திற்குள் பிரவேசிக்கும்படி தீர்மானமாயிருந்தார்கள். மோசே இதிலிருந்து அவர்கள் எண்ணத்தை மாற்ற முயற்சித்தான். தேவன் அவர்களோடு இல்லை என்று சொல்லிப் பார்த்தான். (வ.41-43). ஆனாலும் அவர்கள் அவனை விடுவதாக இல்லை. அதன் விளைவாக ஜனங்கள் ஹோர்மா ("முழுஅழிவு" ஒப்பிடுக வ.45;21:3) என்றுமிடத்தில் நடந்தயுத்தத்தில் படுதோல்வி சந்தித்தனர்.

இப்போது நாம்சொல்லக்கூடும்: "இஸ்ரவேலர் எகிப்திலிருந்து வெளியே வர40 மணிநேரம் எடுத்தது. ஆனால் எகிப்தை இஸ்ரவேலருக்குள்ளிருந்து வெளியே எடுக்க 40 வருடங்கள் ஆயின." எகிப்தின் மனோபாவனைகளை இஸ்ரவேல் ஜனங்களிடமிருந்து முற்றிலும் அழித்து சுத்தப் படுத்த வேண்டியிருந்தது.

**நமக்குப் பாடங்கள்:**

விசுவாசம்தான் ஜெயம்கொண்டுவரும். நாம் விசுவாசத்தில் நடக்க மறுத்தால், நாம் நமக்கு முன் வைத்திருக்கும் சுதந்தரத்தில் பிரவேசிக்கமுடியாமற் போகும். (எபிரெயர் 3:19;4:1-2).

நமது சுதந்தரம் - காணமுடியாததாக இருந்தாலும், விசுவாசம் நமக்குத் தொடர்ந்த காட்சியைத் தரும் (எபிரெயர் 11:1; நீதிமொழி 29:18).

நாம் கர்த்தருடைய வழிகளையும் நிபந்தனைகளையும் நிறைவேற்றினால், தேவன் காலேபுக்கு அவன் பங்கைக் கொடுத்ததுபோல, சுதந்தரவீதம் நமக்கும் கிடைக்கும் (எண்ணாகமம் 14:24; யோசுவா 14:9-14).

இஸ்ரவேலரின் தோல்விகள் நாம் அவர்களைத் தீர்க்கும்படி நமக்கென்று எழுதப்படவில்லை. நாம் அவைகளின் மூலம் கற்றுக்கொண்டு, நமது வாக்குத்தத்த தேசத்தை நோக்கி நடக்கும்படி நமக்கு உதவவும்படிக்கு அது எழுதப்பட்டுள்ளது. (1. கொரிந்தியர் 10:11-12).

# யோசேப்பின் சோதனைகளும் வெற்றிகளும்

**"ஜீவரட்சனை செய்யும்படிக்குத் தேவன் என்னை உங்களுக்கு முன்னே அனுப்பினார்" ஆதியாகமம் 37-45**

### யோசேப்பின் அன்பும் பொறுமையும் (ஆதியாகமம் 37)

யோசேப்பின் மனத்தூய்மையும் இளமையும் கலந்த அழகானது அவன் தந்தையிடம் மற்ற சகோதரர்களைவிட கூடுதலாகப் பற்று வைக்கச் செய்தது. மிகவும் நேசிக்கப்பட்டதினால், அவன் விசேஷ சலுகைகள் பெற்றான். அவைகளில் ஒன்று பலவருண அங்கி அல்லது "நீளமான மேல்வஸ்திரம்" (ரோத்) என்பதாகும் (ஒப்பிடுக *2. சாமுவேல் 13:18-19).* இது அவனுடைய சகோதரரில் பொறாமையை மூட்டினது. அவன் 17 வயதானபோது, அவர்களுடைய வெறுப்பைப் பட்டவர்த்தனமாகக் காட்டும் ஒரு சம்பவம் நடந்தது. தேவன் அவர்களைக் குறித்து, அவர்கள் அவனை வணங்கி நிற்பதாக இரண்டு சொப்பனங்களை அவனுக்குக் காண்பித்தார். இதனால் அவன் சகோதரர் நடுவில் அவன்மேல் பொறாமையும் வெறுப்பும் வளர்ந்தது. பின்பு ஒருநாள் யாக்கோபு தனது மக்கள் சீகேமுக்கு அருகில் ஆடுகளை மேய்க்கும்போது, யோசேப்பை அவன் சகோதரர்களிடம் அனுப்பினான். அவன் தூரத்தில் வருவதை அவர்கள் கண்டவுடன் அவனைக் கொல்லத் திட்டமிட்டார்கள் (வச. 18). ஆனால் தேவன் யோசேப்புடன் இருந்ததால் தலையிட்டார். அவனை கொல்லுவதற்குப் பதிலாக அங்குள்ள ஒரு குழியில் அவனைப் போட்டுவிடும்படி ரூபன் கெஞ்சினதால் அவனுக்குச் செவி கொடுத்தார்கள். ஆனால் கடைசியில், அப்படி அவனைக் குழியில் சாக விடுவதற்குப் பதிலாக அவனை அடிமையாக விற்று பணம் வாங்கினால் அவன் உயிரைக் காப்பாற்றலாம் என்று யூதா பண்ணின ஆலோசனை வலுத்தது.



அதனால் அவனை மீதியானியரின் வியாபாரிகளிடம் 20 வெள்ளிக்காசுக்கு அவர்கள் விற்றுப் போட்டார்கள். பின்பு அவனுடைய மேலங்கியை ஒரு மிருகத்தின் இரத்தத்தில் தோய்த்து, அவன் செத்ததற்கான ஆதாரமாக யாக்கோபிடம் அதைக் காண்பித்தனர்.

பல வருடங்கள் கடந்து சென்றன. பார்வோனுக்கு



முன்பாக யோசேப்பு நிற்கும்போது அவன் வயது 30 ஆக இருந்தது. தன்னுடைய 13 வருடங்களின் பெரும்பகுதியைச் சிறையில் யோசேப்பு கழித்தான். குடும்பத்தையும் தேவபயமுள்ள தந்தையும் விட்டுப் பிரிந்திருந்தாலும், அவன் விசுவாசம் பலமாக இருந்தது. அவன் தேவனை நம்பியிருந்தான். அவன் கண்ட சொப்பனத்தின்படி, தன்னுடைய சகோதரர்கள் தன்னை வணங்குவது நிறைவேறியே தீரும் என்பதைத் தனக்குச் சம்பவித்த அநீதி மற்றும் எதிரிடைகளினூடே ஒருபோதும் அவன் சந்தேகிக்கவில்லை. உண்மையில் தேவன் அவனோடிருந்தார். இப்படியேதான், "நாம் பாடுபட்டால் ஆளுகை செய்வோம்" *(2 தீமோத்தேயு 2:12).* விசுவாசம் வெளிச்சத்துக்கு வருமட்டும் அவன் தேவனுக்காகக் காத்திருக்க வேண்டியிருந்தது.

### போத்திபாரின் வீடும் சிறையும் *(ஆதியாகமம் 39)*

எகிப்தில் யோசேப்பு போத்திபார் என்னும் அதிகாரியால் விலைக்கு வாங்கப்பட்டான். போத்திபார் பார்வோன் அரசனின் அதிகாரியும் சிறைச்சாலைக்குத் தலைவனுமான ஒரு எகிப்தியனாக இருந்தான். யோசேப்பு கையிட்டு செய்த எல்லா வேலைகளையும் தேவன் வாய்க்கச் செய்தார். யோசேப்பு கைசுத்தமும் தயவுமுள்ளவனாக இருந்ததால் போத்திபார் அதைக் கவனித்து வந்திருந்தான். வெகு சீக்கிரம் யோசேப்பு அவனுடைய வீட்டிலுள்ள எல்லாவற்றுக்கும் பொறுப்புள்ளவனாகி, சகலமும் அவன் வசத்தில் ஒப்புவிக்கப்பட்டது. ஆனால் யோசேப்பு அழகுள்ளவனாக இருந்தபடியால் போத்திப்பாரின் மனைவி அவன்மேல் கண்போட்டாள். அவள் யோசேப்பை ஏமாற்றப் பார்த்தாலும் அவன் அவளுக்குத் தொடர்ந்து இணங்காமலிருந்தான். மேலும் அவளுடைய கணவன் தன்மேல் வைத்திருந்த நம்பிக்கையைச் சுட்டிக்காட்டினான்: "நீ அவருடைய மனைவியாக இருக்கிறபடியால் உன்னைத்தவிர வேறொன்றையும் அவர் எனக்கு விலக்கி வைக்கவில்லை. இப்படியிருக்க, நான் இத்தனை பெரிய பொல்லாங்குக்கு உடன்பட்டு, தேவனுக்கு விரோதமாய்ப் பாவஞ் செய்வது எப்படி ?" (வச.9). அவளோ தீர்மானமாக யோசேப்பை வீழ்த்தவும், அவன் ஒத்துவராதிருந்தால் அவனைப் பழிவாங்கி தன் கோபத்துக்கு இரையாக்கிவிடும்படி திட்டம் தீட்டினாள். அதன் விளைவாக, யோசேப்பு சிறையிலடைக்கப் பட்டான். அவன் மனிதரால் குற்றவாளி யானாலும் தேவனுடைய பார்வையில் நீதிமானாக இருந்தான். நீதி என்றைக்கும் கட்டப்பட்டிருக்க முடியாது. "தேவன் அவனோடிருந்தார்." சிறையின் அதிகாரி அவனுடைய நேர்மையைப் பாராட்டி சிறைக்கைதிகளுக்கு அவனைப் பொறுப்பாளி யாக்கினான்.

இங்கு 20ம் நூற்றாண்டில் தேவ ஊழியருக்கென்று இரண்டு பெரிய பாடங்கள் உள்ளன.

1. சோதனையை ஜெயிக்கும் வழி (வச. 12 காண்க). அதைவிட்டு ஓடு. உன் உணர்வுகளை அதில் தங்கிதரிக்க விடாமல், அதில் இருமனதோடு விளையாட வேண்டாம். தவறினால் ஒருவர் அதில் விழுவது நிச்சயம். நீதியைத் தவறாமல் பின்தொடர்ந்து, உண்மையில் முழுமனதோடு ஈடுபடுவது "தீய"

எண்ணங்களுக்கு நேரம் கொடாமல் இரு. *(ஒப்பிடுக: ரோமர் 13:14; கலாத்தியர் 5:16; யாக்கோபு 4:7).*

2. தேவன் நீதிமான்களின் எல்லா துன்ப நேரத்திலும் கூடவே இருப்பார். அவர்கள் துன்பப்பட்டாலும் தேவன் அவர்களை உயர்த்துவார். தாழ்த்தப்படுதல் உயர்த்தப்படுவதற்கு ஓர் ஆயத்தமாகும் *(சங்கீதம் 34 வாசி)*

**வியாக்கியானத்தால் உயர்வு** *(ஆதியாகமம் 40:1-41:45)*

ஏற்ற வேளையில், பார்வோனின் இரு அதிமுக்கிய ஊழியர்களான அவனுடைய சுயம்பாகியும் பானபாத்திரக்காரனும் சிறையில் அடைக்கப்பட்டனர். அந்த இரு கைதிகளுக்கும் வந்த சொப்பனங்கள் அவர்களைத் தொந்தரவு செய்தன. யோசேப்பு அவர்களுக்குத் தைரியம் வரவழைத்தப்பின் அவர்கள் தங்கள் சொப்பனங்களைக் கூறினர். தேவனுடைய திருப்பெயரில் அவன் அவர்கள் சொப்பனங்களுக்கு வியாக்கியானம் கூறினான். அவன் கூறின வார்த்தை பலித்தது. அதின்படி, பானபாத்திரகாரன் திரும்பவும் தன் பதவியில் அமர்த்தப்பட்டான், சுயம் பாகியோ தூக்கிலிடப்பட்டான். யோசேப்பு பானபாத்திரக் காரனிடம், நீ உன் பதவியிலிருக்கும் போது என்னை நினைத்துகொள் என்று கூறியனுப்பினான். அவனோ அதை மறந்துவிட்டான். யோசேப்பு இன்னும் இரண்டு வருஷங்கள் சிறையில் வேலைசெய்தான். சுயலாபத்தைக் கருதி ஜீவிக்கிறவர்கள் எவ்வளவு குருட்டாட்டமும் நன்றிகேடும் உள்ளவர்களாக இருக்கிறார்கள்!



ஆனால் ஆண்டவர் மறக்கவில்லை, அவர் கிரியை செய்தார். பார்வோன் அரசனுக்கு வந்த இரு சொப்பனங்கள் மாம்சீக வியாக்கியானங்களை மீறி அவனைத் தொந்தரவு செய்தன. சூழ்நிலைகளின் காரணமாக பானபாத்திரக்காரனுக்கு ஞாபகம் வந்ததால், தனது சொப்பனம் குறித்து யோசேப்புடன் நடந்த சம்பவத்தைப் பார்வோனுக்கு விளக்கிக் கூறினான். பார்வோனின் ஊழியர்கள் அவசரமாகச் சிறைக்கு அனுப்பப்பட்டனர்.

எகிப்தின் அரசனுக்கு யோசேப்பு அவசரமாகத் தேவையாயிருந்தான். முகச்



சவரம் செய்து குளித்து புதியவஸ்திரம் தரிப்பிக்கப்பட்டு, யோசேப்பு காவல்கிடங்கிலிருந்து அரண்மனைக்கு அழைக்கப்பட்டான். யாஹ்வே கர்த்தர் எவ்வளவு உண்மையுள்ளவர்! அவருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாக இருக்கிறது. அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குத் திறந்திருக்கிறது.

பார்வோனுக்கு முன்பாக, யோசேப்பு தன்னிடம் எந்தவிதமான விசேஷித்த திறமையும் இல்லை என்பதைக் கூறினபின்பு, ''தேவனே பார்வோனுக்கு மங்களமான உத்தரவு அருளிச் செய்வார்" என்றான். பின்பு இரண்டும் ஒரே அர்த்தமுள்ள சொப்பனங்களை வியாக்கியானம் செய்தான். அவைகள் ''பார்வோனுக்கு இரட்டித்தது'' (41:32). ஏனெனில் அவைகள் உறுதியும் உண்மையுள்ளவைகளுமாயிருந்தன. அந்தச் சொப்பனங்கள் பார்வோனுக்கு எகிப்து தேசம் முதல் ஏழு ஆண்டுகள் செழுமையும் புஷ்டியுமுள்ள விளைச்சலைக் காணும் என்றும், அதைத் தொடர்ந்து ஏழு ஆண்டுகள் பஞ்சமும் வரும் என்றும் எச்சரித்தன. இதனால் தரிசனமும் ஏற்றப்படி ஏற்பாடுகளும் செய்யவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. செழுமையான ஆண்டுகளில் சேமித்து, பஞ்சத்திலிருந்து எகிப்தைக் காக்கக்கூடிய ஒரு ஞானமுள்ள மனிதனை ராஜா எகிப்தின்மேல் அதிகாரியாக்க வேண்டும் என்று யோசேப்பு ஆலோசனை கூறினான் (41:33-36). பார்வோன் மனதுக்கு இது பிடித்திருந்தது. இவ்வளவு பெரிய பொறுப்பைச் சாதிக்கும்படி எகிப்திலுள்ள சகல ஞானிகளுக்கும் மேலாகத் தனக்கு எதிரில் நின்றிருந்த அந்த ஞானியைத்தவிர வேறுயாரால் கூடும்? எனவே யோசேப்பு, தேசத்தின் இரண்டாம் ஸ்தானத்துக்கு உயர்த்தி அமர்த்தப்பட்டான். அவனுக்கு ஐசுவரியமும், கனமும், அதிகாரமும் கொடுக்கப்பட்டது. அவன் எகிப்தின் பிரதம மந்திரியாக, பார்வோனுக்கு அடுத்த ஸ்தானத்தில் இருந்தான். உண்மையில் பதவி உயர்வு ஆண்டவரிடமிருந்து கிடைக்கிறது *(சங்கீதம் 75:6-10).* இஸ்ரவேலின் இரட்சிப்புக்கான முதற்படி எடுக்கப்பட்டது. சீமை தேசத்தில் இஸ்ரவேலரின் வளர்ச்சியும் திட்டமிடப் பட்டது. *(ஆதியாகமம் 45:5; 15:13-16)*

**பஞ்சத்தின் விளைவுகள்** *(ஆதியாகமம் 4:53-57)*

ஏழு வருட செழிப்பு வந்து கடந்துப் போனது. யோசேப்பு வேண்டிய அளவு தானியத்தைச் சேமித்து வைத்தான். பஞ்சம் ஆரம்பமாகும்போது எகிப்தின் களஞ்சியங்கள் எல்லாம் நிரம்பி வழிந்தன. பஞ்சம் பழங்கால உலகநாடுகள் அனைத்திலும் பரவியிருந்தது. அச்சமயம் எகிப்தில் தானியம் உண்டாயிருக்கிறதென்று கேள்விபட்டபோது, கோதுமை வாங்கும்படி புறதேசத்தார் தொடர்ச்சியாக வந்து சென்றனர்.

அதைப்போலவே, கானான் தேசமும் யாக்கோபு குடும்பத்தினர் உட்பட பஞ்சத்தினால் பாதிக்கப்பட்டனர். அவர்களும் எகிப்துக்குச் செல்லத் தீர்மானித்தனர். பென்யமீனைத் தனது சகோதரர்களுடன் அனுப்புகிறதினால் தீமை மேற்கொள்ளாதபடிக்கு யாக்கோபு அவனை அனுப்ப மறுத்துவிட்டான்.

ஏனெனில் அவன் மனதில் தன் அன்புக்குரிய ராகேலின் நினைவாக இருந்தது பென்யமீன் மாத்திரம்தான்.

### யோசேப்பின் சகோதரர் எகிப்து விஜயம் *(ஆதி 42:1-43:14).*

இவ்வாறு ஒருநாள் 10 பேர் எகிப்தில் யோசேப்பின் முன்வந்து தோன்றினர். அவர்கள் தாடி வளர்த்து மேய்ப்பர்களின் வஸ்திரம் அணிந்திருந்தனர். உடனடியாக அவர்கள் தன் உடன் பிறந்த சகோதரர்கள் என்று அடையாளம் கண்டுகொண்டான். அவர்களோ அவனை இனம் காணவில்லை. தாங்கள் குழியில் போட்டு, பின்பு அடிமையாக விற்ற இளம் மேய்ப்பனான தம்பியின் தோற்றம் இப்போது தன் முகச்சவரம் செய்து, எகிப்தின் ராஜமரியாதையுடன் ராஜவஸ்திரத்தில் கம்பீரதோற்றத்துடன் காணப்பட்ட பிரபுவுக்கு எந்த விதத்திலும் பொருத்தம் காணமுடியாது. அத்துடன் மொழிப் பிரச்சனை இருந்தது. அவர்களால் எகிப்திய மொழிபேச முடியவில்லை. யோசேப்பு மொழிபெயர்ப்பாளரைக் கொண்டுப் பேசினதால் அவன் எபிரேய மொழி பேசாதவன் என்பது போல தோன்றி, அவனுடைய சுயரூபத்தை மறைத்துவிட்டது. யோசேப்புக்கு அது விலையேறப்பெற்ற தருணமாக இருந்தது. ஏனெனில் முந்தின ஆண்டுகளில் அவன் கண்டகனவுகள் நிறைவேறி, அவர்கள் அவன்முன் இப்போது பணிந்து நின்றிருந்தனர் (42:6; 37:5-9). தேவனுடைய கரம் அவன் கண்களுக்கு முன்பாகக் கிரியை செய்வதைப் பார்த்தான்.

யோசேப்பு அவர்களை மட்டாக நடத்தினான். அவர்கள் தங்களுடைய கடந்தகாலத் தவறுகளைப் பற்றி மனந்திரும்பி, தங்கள் வழிகளைத் திருத்திக் கொள்ளும்படி அவர்களைச் சிறுமைப்படுத்துவது அவன் நோக்கமாக இருந்தது. அவர்கள் வேவுகாரர்கள் என்று அவர்களை அவன் குற்றஞ்சாட்டினான். தாங்கள் நிஜஸ்தர் என்று நிரூபிக்கும்படிக்கு, அவர்கள் வீட்டுக்குத் திரும்பி பென்யமீனை அழைத்துவரும்படி வற்புறுத்தினான். அச்சமயம் சிமியோனைப் பிணைக்கைதியாகக் கட்டி காவலில் போட்டான். அவர்கள் எகிப்தின் முரட்டுப் பிரபுவின் பயத்தோடுகூட தங்கள் வீட்டுக்குத் திரும்பினார்கள். அங்கு தங்கள் கோதுமை சாக்கு மூட்டைகளின் வாயில் அவர்கள் பணம் கட்டியிருந்தது கண்டு ஆச்சரியமடைந்தார்கள். அவர்களுடைய பயம் அதிகரித்தது."

சிலநாட்கள் சென்று அவர்கள் கொண்டுவந்த தானியம் செலவாகி முடிந்தது. பஞ்சமும் தீர்ந்தபாடில்லை. எகிப்துக்கு அவர்கள் திரும்பிச் செல்லவேண்டிய கட்டாய சூழ்நிலை உருவானது. ஆனால் பென்யமீனை அனுப்ப யாக்கோபு தொடர்ந்து மறுத்து வந்தான். ரூபன் யாக்கோபைச் சமாதானப்படுத்த எடுத்த முயற்சிகள் வீணாயின. கடைசியில் யூதா தனது தகப்பனை வற்புறுத்தி, தங்களது கடைசி சகோதரனின் பிராணனுக்கு உத்தரவாதம் அளித்தான். அவர்கள் அந்தப் பிரபுவின் கண்களில் தயவு கிடைக்கும் படி என்னென்ன செய்ய வேண்டுமோ அத்தனையும் முன்பாதுகாப்பாகச் செய்தார்கள் - ஏனெனில் அது அவசியமாக இருந்தது!



### எகிப்துக்கு இரண்டாம் விஜயம் *(ஆதியாகமம் 43:15; 44:34.)*



அவர்கள் எகிப்துக்கு வெகுமதிகள், வேண்டிய பணம், யாக்கோபு செய்தனுப்பின மன்றாட்டாகிய, "சர்வவல்லமையுள்ள தேவன் அவன் சமுகத்தில் இரக்கங் கிடைக்கப் பண்ணுவாராக" என்ற ஆசீர்வாதத்துடன் (43:11-14) கிளம்பினார்கள். அவர்கள் எகிப்தைச் சென்றடையும்போது அவன் வீட்டுக்கு வழி நடத்தப்பட்டனர். அங்கு அவர்களுக்கென்று விநோதமான சம்பவங்கள் காத்திருந்தன. தங்கள் சாக்குகளில் கட்டியிருந்த பணமுடிப்பு பற்றின குற்ற உணர்வுடன் சென்ற அவர்களிடம் வேலைக்காரன் பயப் படாதிருக்கும்படி கூறினது ஆச்சரியம் தந்தது. சிமியோனை அவர்களிடம் மறுபடியும் திறந்து விட்டனர். அவர்கள் யோசேப்பால் கனம் பெற்றார்கள். முக்கியமாக பென்யமீனை அவன் மிகவும் நேசித்தபடியால் மறைமுகமாக யோசேப்பு அழுது ஆனந்த கண்ணீர்வடித்தான். அவர்களுக்கென்று பிரதம மந்திரி ஏற்படுத்தின விருந்தில் அவர்கள் உட்காரும்போது, பெரியவன் முதல் கடைசி சகோதரன் வரை பிறந்தவரிசையில் உட்கார வைத்தது இன்னும் அவர்களுக்கு ஆச்சரியத்தைத் தந்தது. இப்படி கனம் பெற்று அவர்கள் தங்கள் தானிய மூட்டைகளுடன், நடந்த சம்பவங்களைக் குறித்து ஆச்சரியப்பட்டவர்களாக வீட்டுக்குப் புறப்பட்டனர்.

ஆனால் இந்த நடபடிகளையெல்லாம் நடத்தி வைத்தது யோசேப்பு. அவன் மேலும் அவர்களை மற்றொரு சோதனைக்குட்படுத்தினான். அவன் தனது விசேஷித்த பானபாத்திரத்தைப் பென்யமீனின் சாக்கில் மறைத்து கட்டச் சொன்னான். அவர்கள் ராகேலின் மகனிடமும் தங்கள் தகப்பனிடமும் பாசமுள்ளவர்களாக இருக்கிறார்களா, அவர்களுடைய மனம் மாறியுள்ளதா என்பதைச் சோதித்து அறியும்படி விரும்பினான். அவர்கள் திரும்பிப் பயணமாகச் செல்கையில் ஒரு எகிப்தியன் அவர்களைத் துரத்தி, வழிமறித்து, அவர்கள் பிரதம மந்திரியின் பானபாத்திரத்தைத் திருடிச் செல்லுகிறார்கள் என்று குற்றஞ்சாட்டினான்! அவர்கள் அதை மறுத்தாலும் அவன் விடாமல் எல்லாருடைய மூட்டைகளையும் திறந்து சோதனை செய்தான். மூத்தவனுடைய மூட்டையிலிருந்து வரிசையாக எல்லோரும் சோதனைக்குள்ளானார்கள். ஆனால் ஆச்சரியமாக,

பென்யமீனின் மூட்டையில் அந்தப் பாத்திரம் சிக்கியது! அவர்கள் அவசரமாக எகிப்துக்குத் திரும்பிவந்து யோசேப்பிடம் இரங்கும்படி கெஞ்சினார்கள். பென்யமீனுக்காகத் தன் தந்தையினிமித்தம் தன்னைத் தண்டிக்கும்படி யூதா தனிப்பட்ட முறையில் யோசேப்பிடம் மன்றாடினான். இங்கு சரியான மனந்திரும் புதல் தெரிந்தது - முன்பு தனது இளையசகோதரன் கெஞ்சின சத்தத்தையும் மீறி அவனை விற்றுப்போட்டு அவன் தகப்பனுடைய சஞ்சலத்தையும் சற்றும் மதியாமல் நடந்தவர்கள் இப்போது மாறிவிட்டார்கள் (37:33-35).

## யோசேப்பு தன்னை வெளிப்படுத்துகிறான் *(ஆதியாகமம் 45:1-46:7)*

யோசேப்பால் தனது உணர்ச்சிகளை மேலும் அடக்கிவைக்க இயலாமற் போயிற்று. அவன் அறையிலிருந்த எல்லா எகிப்தியரையும் வெளியேறும்படி கட்டளையிட்டான். பின்பு அவனுடைய சகோதரர்கள் வியப்படையும்படி தன்னை வெளிப்படுத்தினான்: "நான்தான் யோசேப்பு." அவர்கள் மூர்ச்சையடைந்து ஊமையர்களைப் போலானார்கள். யோசேப்பு சத்தமாக அழுது அவர்கள் பயத்தை நீக்கினான். அவர்களைப் பழிவாங்கும் எண்ணமும் நோக்கமும் யோசேப்பிடம் இருக்கவில்லை: "என்னை இவ்விடத்தில் வரும்படி விற்றுப் போட்டதினால், நீங்கள் சஞ்சலப்பட வேண்டாம். ஜீவரட்சணைசெய்யும் படிக்குத் தேவன் என்னை உங்களுக்கு முன்னே அனுப்பினார்" (45:5). அன்பு திரளான பாவங்களை மூடும் (1. பேதுரு 4:8). அவனுடைய மனதில் எந்தக் கசப்பும் பழிவாங்கும் எண்ணமும் இருக்கவில்லை.

யோசேப்பு தன் மனதார அவர்களிடம் பேசி, இந்தக் காரியத்தில் தேவனுடைய நோக்கத்தை விளக்கினான். "பூமியிலே இஸ்ரவேலின் வம்சம் அழியாமல் காக்கவும், பெரிய ரட்சிப்பினால் உயிரோடே காப்பதற்காகவும் "தேவன் என்னை முன்னதாக அனுப்பினார் (45:7). அவர்களிடம் பேசிக்கொண்டிருந்த இளம் அரசியல் பிரபு தங்கள் சகோதரன்தான் என்று அவர்கள் உணர ஆரம்பிக்கையில், அவன் அவர்களைத் துரிதப்படுத்தி, தன்னுடைய வயதான அன்பான தகப்பனை எகிப்துக்கு அழைத்துவரவும், தனது அரவணைப்பில் அவரைப் பாதுகாக்கவும், மீதியான பஞ்ச வருடங்களினூடே அவர்களுக்கும் ஆடுமாடுகளுக்கும் உணவு கொடுக்கவும் அவர்களை அனுப்பிவைத்தான்."

அவன் சகோதரர்கள் வீட்டுக்குப் போய் யாக்கோபிடம் அந்த நற்செய்தியை அறிவித்தார்கள். "யாக்கோபின் இருதயம் மூர்ச்சையடைந்தது. அவன் அவர்களை நம்பவில்லை." அவன் தனக்கென்று யோசேப்பு அனுப்பின வெகுமதிகளையும், தன்னை ஏற்றிக் கொண்டு போகும்படி அனுப்பின வண்டிகளையும் கண்டபோது யாக்கோபு நம்பிக்கையடைந்து அவன் ஆவி உயிர்த்தது. நன்றியும் மிகுந்த சந்தோஷமும் நிறைந்தவனாக பெயர்செபாவுக்குப் போய் அங்கு தேவனைத் தொழுதுகொண்டான். தேவன் அவனை ஆறுதல் படுத்தி, அவன் எழுந்து போகும்படி உத்தரவு அருளினார். "நாம் வேண்டிகொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குச் செய்யத் தேவன் வல்லமையுள்ளவர்" *(எபேசியர் 3:20).*



## நமக்குப் பாடம்:

யோசேப்பு கஷ்டப்பட்டாலும் தேவன் அவனை ஒருபோதும் அவனுடைய நிந்தைக்கு விட்டுவிடவில்லை. இருள் நிறைந்த எகிப்திலும் கூட "தேவன் அவனோடேகூட இருந்தார்."

தனது குடும்பத்தைவிட்டு மறைவாகத் தூரத்திலிருந்தாலும், யோசேப்பு போத்திபாரின் மனைவியிடம் தவறாக நடவாமல் இருந்தான். ஏனெனில் அப்படிப்பட்ட காரியம் எல்லாவற்றையும் காண்கிற தேவனுடைய பார்வையில் பாவமாக இருக்கும் என்பதை அவன் அறிந்திருந்தான். அப்படிப்பட்ட எண்ணம்தான் நம்மைக் கட்டுப்படுத்த வேண்டும்.

தவறுசெய்யும்படி சாதகமான சூழ்நிலையில் அங்கிருந்து விலகிச்செல்வதே பாவத்தையும் அதன் தீய விளைவுகளையும் தவிர்க்க சரியான வழி என யோசேப்பு அறிந்திருந்தான்.

துன்பம் அநுபவித்தது யோசேப்பை உயர்வுக்கு ஆயத்தப் படுத்தினது. நமது தனிவாழ்வில் வரும் கஷ்டங்கள் நம்மைப் பரலோக ராஜ்யத்துக்கென்று தயார் செய்கிறது.

யோசேப்பு தேவனுடைய நோக்கத்தை அறிந்து தன் சகோதரரின் குற்றங்களை மன்னித்தான். நம்மை வேதனைபடுத்துகிறவர்கள் மேல் கசப்பைப் எண்ணாமல், யோசேப்பு தன் சகோதரருக்கு உதவினது போல நாமும் செய்ய வேண்டும்.

## யோசேப்பு - எகிப்தில் விற்கப்பட்டான்

1) யாக்கோபு யோசேப்பைத் தன் சகோதரர்களைத் தேடும்படி அனுப்புகிறான். அவர்கள் சீகேமில் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தார்கள் (37:12-14).
2) சீகேமை அடைந்த யோசேப்பு தோத்தானுக்கு அனுப்பப்படுகிறான் (37-15-17).
3) பொறாமையினால் யோசேப்பின் சகோதரர் அங்கியைக் கழற்றி, அவனைக் குழியில் போடுகிறார்கள் (37:18-24).
4) கீலேயாத்திலிருந்த வந்த இஸ்மவேல் வியாபாரிகளிடம் யோசேப்பு அடிமையாக விற்கப் படுகிறான். அவனை அவர்கள் எகிப்துக்குக் கொண்டு போகிறார்கள் (37:25-28).
5) சகோதரர் யாக்கோபிடம் திரும்பிவந்து யோசேப்பின் அங்கியைக் கொடுக்கிறார்கள். அங்கியை ரத்தத்தில் தோய்த்து யாக்கோபை ஏமாற்றி, யோசேப்பு காட்டு மிருகத்தால் இறந்து போனதாக நினைக்கச் செய்கிறார்கள் (37:29-35).